வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, யூன்- 2017
# Term Examination, June - 2017

| தரம் :- 13 (2017) | கிறிஸ்தவ நாகரிகம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

## பகுதி – I

1. மோசேக்கு நெருப்பு வடிவில் இறைபிரசன்னம் உணர்த்தப்பட்டு பணி கொடுக்கப்பட்டது போன்று இறை பிரசன்னமும் பணி செய்ய அழைப்பும் திருத்தூதர்களுக்கு கொடுக்கப்பட்டது.
   1. இயேசுவின் விண்ணேற்றத்தின் போது
   2. இயேசு சிலுவையடியில்
   3. திருத்தூதர்களுக்கு காட்சி கொடுத்தபோது
   4. பாஸ்கா விழாவின் போது
   5. பெந்தக்கோஸ்தே விழாவின் போது

2. A :கிறிஸ்தவர்கள் கப்பல்களில் தப்பினர்
   B :கிறிஸ்தவர்கள் பாலைவனங்களுக்கு தப்பி ஓடினர்
   மன்னன் தீசியுஸ் காலத்தில் துன்பங்களுக்கு பயந்த மக்கள் மேலே குறிப்பிட்டவாறு செயற்பட்டனர் என்று கூறியவர்
   1. தேர்த்தூலியன் 2. சிப்பிரியன் 3. ஓரிஜின்
   4. இரணேயுஸ் 5. அலெக்ஸ்சாந்திரிய சாந்தப்பர்

3. அகுஸ்தினாரால் கண்டிப்புக்குள்ளாகிய தப்பறைகள்
   1. ஆரியபேதகமும், மசதோனிய பேதகமும்
   2. மனிக்கேய பேதகமும், தொனாத்திய பேதகமும்
   3. தொனாத்திய பேதகமும் மனிக்கேய பேதகமும்
   4. ஆரியபேதகமும் நெஸ்தோரிய பேதகமும்
   5. இயுத்திக்கேயப் பேதகமும் தோற்றக்கொள்கையும்

4. சுவீடன் நாட்டு மக்கள் மனந்திரும்பியது
   1. ஆன்ஸ்காரின் மறைப்பணியின் மூலம்
   2. பத்திரிசியாரின் மறைபணியின் மூலம்
   3. பொனிபாசின் மறைப்பணியின் மூலம்
   4. இஞ்ஞாசியாரின் மறைப்பணியின் மூலம்
   5. கிறகோரியாரின் மறைப்பணியின் மூலம்

5. A: மக்களிடையே இரட்சணிய எண்ணம் புத்துயிர் பெற்றது
   B: விசுவாசம் தழைத்தோங்கியது
   C: திருச்சபையின் போதனைகள் உறுதிப்படுத்தப்பட்டது
   D: கருணை வீரர் சபைகள் தோன்றியமை
   E: மக்கள் ஒருவர் ஒருவரை அறிந்து அன்பு செய்ய வழி உண்டானது
   மேலே குறிப்பிடப்பட்ட கூற்றுக்களுள் சிலுவைப் போரினால் திருச்சபைக்கு கிட்டிய நன்மைகளாவன.
   1. ABC 2. ABE 3.ACD 4.ADE 5. ABD

6. துறவறப் பொதுவாழ்விற்கு வித்திட்டவர்
   1. வனத்து அந்தோனியார்  2. பக்கோமியாஸ்  3. எலியாஸ்
   4. தேப்ஸ் சின்னப்பர்  5. அகுஸ்தினார்

7. டொமினிக்கன் சபை ----------------- சட்டத்தைப் பின்பற்றியது. இடைவெளிக்குப் பொருத்தமானது
   1. அக்குவினாரின்  2. ஆசிர்வாதப்பரின்  3. அம்புறோசியாரின்
   4. அந்தோனியாரின்  5. அகுஸ்தினாரின்

8. திருச்சபையில் ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்தத் தோன்றிய இரவலர் சபைகளுள் முதலிடத்தைப் பெறும் துறவற சபை
   1. டொமினிக்கன் சபை  2. வல்தேசியன் சபை  3. பிரான்சிஸ்கன் சபை
   4. அகுஸ்தினார் சபை  5. கார்மேல் சபை

9. ஐரோப்பாவில் துறவற இல்லங்களில் மறுமலர்ச்சிக்கு வழிகாட்டிய துறவற சபையாக விளங்குவது
   1. அகுஸ்தினார் துறவற சபை  2. வல்தேசியன் துறவறசபை
   3. டொமினிக்கன் துறவற சபை  4. ஆசீர்வாதப்பர் துறவற சபை
   5. பிரான்சிஸ்கன் துறவற சபை

10. ஆசிர்வாதப்பரின் கருத்துக்களுள் பொருத்தமானது
    1. தனிமையில் தவவாழ்வே சிறந்தது
    2. சோம்பல் ஆன்மாவை அழிக்கும் ஒரு செயல்
    3. மறையுரை வழங்க இடத்திற்கிடம் செல்லல்
    4. இறைவார்த்தை வீதிகளில் அறிவித்தல்
    5. உழைப்பு மனிதனை வாழவைக்கும்

11. சீர்திருத்த சபைகளின் இரண்டாவது பரம்பரையைச் சேர்ந்தவர்.
    1. மாட்டின் லூதர்  2. சுவிங்ளி  3. வெஸ்லி
    4. முன்சர்  5. கல்வின்

12. நற்கருணையில் இயேசுவின் பிரசன்னம் இல்லை என்றும் நற்கருணை ஒரு நினைவு கூரல் மட்டுமே என்ற சுவிங்ளியின் கருத்திற்கு தோமஸ் முன்சர் கூறுவது
    1. நற்கருணை ஒரு ஆன்மாவை வளர்க்கும் ஒரு திருவுணவாகும்
    2. நற்கருணை இயேசு அப்ப இரசம் வடிவில் ஓர் அடையாளம் மட்டுமே
    3. நற்கருணை விருந்து ஒரு பண்டமாற்று அடையாளம் மட்டுமே
    4. நற்கருணை விருந்து இயேசுவின் தியாகப்பலியின் ஓர் அடையாளம் மட்டுமே
    5. நற்கருணையில் இயேசு நிரந்தரமாகவே குடிகொண்டுள்ளார்

13. சீர்திருத்த சபைகளின் முக்கிய தளமாக ஜெனிவாவை மாற்றியவர்
    1. மாட்டின் லூதர்  2. தோமஸ் முன்சர்  3. ஜோன் கல்வின்
    4. உல்றிச் சுவிங்ளி  5. ஜோண் வெஸ்லி

14. A - கிறிஸ்தவ நாடுகளுக்கிடையே போட்டி காணப்பட்டமை
    B - மக்கள் மத்தியில் தேசிய உணர்வு காணப்பட்டமை
    C - கிறிஸ்தோப்பர் கொலம்பஸ், வாஸ்கொடகாமா என்பவர்களின் புதிய கண்டுபிடிப்புக்கள்
    D - புதிதாகத் தோன்றிய சமய சபைகளின் கருத்துக்கள்

    மேலே குறிப்பிட்ட கூற்றுக்களில் மத்திய காலத்தில் பண்பாடு கடற்கரையைச் சார்ந்த ஒன்றாக மாறியமைக்கான காரணங்களுள் ஒன்று
    1. D  2. C  3. B  4. A  5. AC

15. A - யோவான் ஹாவார்ட் சிறைச்சாலைகளில் சீர்திருத்தத்தை ஏற்படுத்தினார்
    B - றொபேட் றேய்க்ஸ் ஓய்வுநாள் பாடசாலையை உருவாக்கினார்

    இக்கூற்றுக்கள்
    1. மெதடிஸ் சபையினரின் பணிகளாகும்  2. லூதரன் சபையின் பணிகளாகும்
    3. அங்கிலிக்கன் சபையின் பணிகளாகும்  4. கல்வின் சபையின் பணிகளாகும்
    5. இரட்சணிய சேனையின் பணிகளாகும்

16. ஜப்பானிலுள்ள உயர்தர பாடசாலைகள் பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களாக வளர்ச்சி பெறக் காரணம்
    1. அவை தேவாலயங்களில் நடைபெற்றமையாகும்
    2. வரையறுக்கப்பட்ட கல்வி நடைபெற்றமையாகும்
    3. இறையியலுக்கு முக்கியத்துவம் கொடுத்தமையாகும்
    4. குருக்கள் விரிவுரையாளர்களாகப் பணிபுரிந்தமையாகும்.
    5. மத எல்லைகளுக்கு அப்பாற்பட்டு எல்லோரையும் உள்வாங்கியமையாகும்.

17. கிழக்காசிய நாடுகளில் அரசியலில் முக்கிய பங்கு வகிக்கும் திருச்சபை
    1. கொரியா திருச்சபை 2. பிலிப்பைன்ஸ் திருச்சபை 3. ஜப்பான் திருச்சபை
    4. சீனத் திருச்சபை 5. இந்தியத் திருச்சபை

18. இந்தியாவில் போர்த்துக்கேய மறைபரப்பாளர்கள் கத்தோலிக்க திருச்சபையின் மையமாக்கிக் கொண்ட இடம்
    1. கொச்சின் 2. கல்கத்தா 3. கோவா
    4. கள்ளிக்கோட்டை 5. மும்பாய்

19. சீரோ மலபார் திருச்சபையிலிருந்து வேறுபட்டவர்களாகவும், மேற்கு சீரிய மரபுடன் தொடர்புடையவர்களாகவும் விளங்கியவர்கள்
    1. ஜாக்கோபிஸ்தர் 2. கீழைத்தேய கத்தோலிக்கர் 3. வைதீக திருச்சபையினர்
    4. சீரோ மலங்கார திருச்சபையினர் 5. இலத்தீன் திருச்சபையினர்

20. இந்திய உயர்சாதியினரை மனம் மாற்றுவதற்காகவும், வழிபாட்டில் பண்பாட்டு மயமாகுதலை ஆதரித்தவருமாகக் கருதப்படுபவர்
    1. மத்தேயு ரிச்சி 2. வீரமாமுனிவர் 3. சீகன்பால்கு ஐயர்
    4. பிரான்சிஸ் சவேரியார் 5. றொபேட் தே நோபிலி

21. மிசனறிக்கோடியா என்னும் பிறர்நலச் சேவைகளின் உருவாக்கமான தாபனத்தின் பணி மூலம் மக்கள் பயனடைந்தது
    1. இலங்கையில் புராதன காலத்தில் வாழ்ந்த பாரசீகக் கிறிஸ்தவர்கள்
    2. போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் வாழ்ந்த மக்கள்
    3. ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் கல்வி மதத்தில் இணைந்தவர்கள்
    4. ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையில் வாழ்ந்த கத்தோலிக்கர்கள்
    5. சுதந்திரகாலத்தில் கிறிஸ்தவ மிசனரியினர் வருகையின் போது

22. இலங்கையில் யோசவ்வாஸ் அடிகளார் ஆரம்பித்த அரும் பெரும் ஆன்மீகப் பணியின் நடுநிலையம்
    1. மூப்பரின் இல்லம் 2. சில்லாலையின் சிற்றாலயம்
    3. கோட்டையில் காணப்பட்டட ஆலயம் 4. கண்டியில் அடிகளார் அமைத்த ஆலயம்
    5. சிறைச்சாலை

23. கண்டி அரசர் நரேந்திரசிங்கவினால் யாக்கொமே கொன்சால்வெஸ் அடிகளாருக்கு வழங்கப்பட்ட பெயர்
    1. தமிழ் சிங்கள இலக்கியத்தின் தந்தை 2. இலங்கையின் இரண்டாம் அப்போஸ்தலர்
    3. சாங்கோபாங்கோ சுவாமி 4. மொழியலங்காரத்தின் பிதா
    5. இசையின் வித்துவான்

24. கத்தோலிக்கர் மேல் ஒல்லாந்தரால் விதிக்கப்பட்ட பலவிதமான தடைச் சட்டங்களுக்கு விலக்களித்தவர்
    1. பிறெட்டிக் நோர்த் 2. கிறிஸ்தோப்பர் பொஞ்சின் 3. ஒறாஷியோ பெற்றக்கீனி
    4. பீற்றர் மார்க் 5. தோமஸ் மெயிற்லான்ட்

25. கிறிஸ்தோப்பர் பொஞ்சின் அடிகளாரால் சுதேச குருக்களைப் பயிற்றுவிப்பதற்கென இலங்கையில் முதல் ஆரம்பிக்கப்பட்ட குருமடம்
    1. கண்டியில் பாப்புவின் குருமடம்
    2. புனித சவேரியார் குருமடம்
    3. புனித மடுத்தீனார் குருமடம்
    4. கண்டி தேசிய குருமடம்
    5. யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட அமலமரித் தியாகிகளின் குருமடம்

26. சுதந்திர இலங்கையில் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக அரசாங்கத்தினால் இழைக்கப்பட்ட அநீதியான சம்பவமாகக் கருதப்படுவது
   1. அனைத்து ஆலயங்களிலும் வழிபாடு செய்ய தடை விதிக்கப்பட்டமை
   2. பாடசாலைகளில் **மாணவர்கள் சமயம் கற்பதைத் தடை செய்தமை**
   3. அரச உதவி பெறும் அனைத்துப் பாடசாலைகளும் அரச உடமையாக்கப்பட்டமை
   4. வெளிநாட்டு மறைபரப்பாளர்கள் இந்நாட்டிற்கு வருகை தருவதைத் தடை செய்தமை
   5. குருமடங்களில் மாணவர்கள் கல்வி கற்பதைத் தடைசெய்தமை

27. பின்வருவனற்றுள் கிரேக்க நாகரிகம் குறித்த சரியான கூற்று /சரியான கூற்றுக்கள்
   A - கிரேக்க மொழி கற்றோரின் மொழி என அழைக்கப்பட்டது
   B - கி.மு. 63இல் பலஸ்தீனா நாடு கிரேக்க சாம்ராச்சியத்தின் அதிகாரத்திற்குட்பட்டது
   C -மனித சமூகத்தின் மேம்பாட்டிற்கு பெரும்பங்களிப்புச் செய்த நாகரிகங்களுள் இந்நாகரிகம் முதன்மையானது
   1. A B மாத்திரம் 2. A C மாத்திரம் 3. A B C எல்லாம்
   4. A மட்டும் 5. B C மாத்திரம்

28. யூதர்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஜெருசலேம் கோவிலை மீண்டும் புதுப்பித்துக் கட்டியவர்
   1. சாலமோன் 2. நீரோ 3. ரைட்டஸ் 4. ஏரோது 5.சைரஸ்

29. இஸ்ரயேலர் மத்தியில் குருத்துவப் பணிக்கு தெரிவு செய்யப்பட்ட தொகுதி
   1. யூதா - லேவி - சதுசேயர் குடுத்தவர்
   2. லேவி - சதுசேயர் - சாதோக் வம்சத்தவர்
   3. லேவி - ஆரோன் - சாதோக் வம்சத்தவர்
   4. லேவி - பெஞ்சமின் - பரிசேயர் மரபினர்
   5. சிமியோன் - ஆரோன் - லேவி குடும்பத்தவர்

30. இறைவழிபாடு இஸ்ராயேலின் மையமாக அமைந்திருந்தாலும் --------------------------- மையமான சமய வழிபாடாக யூதர்கள் கருதினர். இடைவெளிக்குப் பொருத்தமானது
   1. பலி செலுத்துவதையே
   2. விழாக்களைக் கொண்டாடுவதையே
   3. அறஞ் செய்தலையே
   4. தியானம் செய்தலையே
   5. செபம் செய்தலையே .

31. இஸ்ராயேலரின் சமய வழிபாட்டில் இரண்டாம் இடம் பெறுவது
   1. விழாக்களைக் கொண்டாடுதல் 2. செபம் செய்தல் 3. அறஞ் செய்தல்
   4. தியானம்செய்தல் 5. பலிசெலுத்துதல்

32. பின்வரும் கூற்றுக்களுள் உயர்குலத்தோர் தொடர்பாகப் பொருந்தாதது
   1. நாட்டின் பொதுச்சொத்து முழுவதற்கும் அரச குடும்பம் உரிமை பாராட்டுதல்
   2. தரைவிரிப்புப் பயன்படுத்தல்
   3. பல மனைவியரைக் கொண்டிருத்தல்
   4. இவர்கள் யூதர்களாய் இருந்தாலும் அரசியல் காரணங்களால் யூத சமுதாயத்திலிருந்து பிரிந்து வாழ்ந்தவர்கள்
   5. உல்லாச வாழ்க்கையை வெளிப்படுத்துவதற்கு அடிக்கடி விருந்துகளில் ஈடுபடுவர்

33. யூதர்களின் நசரேய அர்ப்பணம் என்பது
   1. இறைவனுடன் மானிடர் கொண்டிருக்கும் உறவைப் பலி மூலம் வெளிக்காட்டல்
   2. பிறந்த முதற்குழந்தையை இறைவனுக்கு அர்பணித்து நன்றி செலுத்தல்
   3. யூதர்கள் தமது தலைமுடியை மழித்துக் கொள்ளுதல்
   4. யூதர்களின் விழாக்களில் ஒன்றான இவ்விழாவிற்கு எருசலேம் சென்று பொருத்தனை செய்தல்
   5. நோயிலிருந்து குணமாகி நலம் பெற்றதற்கான அத்தாட்சிப்பத்திரம் பெற்று இறைவனுக்கு தம்மை அர்ப்பணித்தல்

34. நிசான் மாதத்தில் கொண்டாடப்படும் யூதவிழாக்களாவன
   1. பெந்தக்கோஸ்தே விழாவும் புளியாத அப்பவிழாவும்
   2. பாஸ்காவிழாவும், பெந்தக்கோஸ்தே விழாவும்
   3. பாஸ்காவிழாவும், புளியாத அப்பவிழாவும்
   4. கூடாரவிழாவும், பெந்தக்கோஸ்தே விழாவும்
   5. பாவக்கழுவாய் விழாவும், கோயில் அர்ப்பண விழாவும்

35. தலைமுடியை வளர்த்துக் கொள்ளுதல் யூத சமூகத்தில்
   1. சமுதாய இழிநிலையாகக் கருதப்பட்டது
   2. தாழ்த்தப்பட்டோரை இனங்காட்டியது
   3. சமுதாய நடுத்தர வர்க்கத்தினரை இனங்காட்டியது
   4. விருத்தசேதன சடங்கை நிறைவேற்றியோராகக் கருதப்பட்டது
   5. சமுதாய உயர்நிலையாகக் கருதப்பட்டது

36. இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ''திருத்தூதர்களின் படிப்பினைகள்'' அடங்கிய நூல்களின் எடுத்துக் காட்டப்பட்டுள்ளவாறு திருமுழுக்குப் பெற இருப்பவர்கள் அனைவராலும் முன்கூட்டியே நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு செயலாக அமைவது
   1. உடல்ரீதியாக தூய்மைப்படுத்திக் கொள்ளல் 2. ஒப்புரவு செய்து கொள்ளல்
   3. வெண்ணிற ஆடை தயார்ப்படுத்திக் கொள்ளல் 4. சபையின் நல்லவர்களைச் சந்தித்தல்
   5. ஒரு சந்தி கடைப்பிடித்தல்

37. எங்கள் குடும்பங்களிலும் வாழ்விலும் இயேசுவே தலைவராக இருக்க வேண்டுமென்பதை பவுலடிகளார் உணர்த்தும் திருமடல்களாவன
   1. கொரிந்தியர், கொலேசையர் 2. கலாத்தியர், கொரிந்தியர் 3. கொலோசையர், எபேசியர்
   4. எபேசியர், கலாத்தியர் 5. கொரிந்தியர், தெசலோனிக்கர்

38. கி.பி.800ம் ஆண்டளவில் ஆரம்பக் கல்வித்துறை மட்டில் அபிவிருத்தி ஏற்பட்டது
   1. மன்னன் லூாயிஸின் ஆணையின் படி 2. மன்னன் கொன்ந்தாந்தினின் ஆணையின் படி
   3. மன்னன் சாளிமேனின் ஆணையின் படி 4. மன்னன் தியோடோசியஸின் ஆணையின் படி
   5. மன்னன் குளோவியஸின் ஆணையின் படி

39. இலத்தீன் திருச்சபைத் தந்தையர்களில் மிகச் சிறந்தவரான அகுஸ்தினார் ----------------------- என அழைக்கப்படுகின்றார். வெற்றிடத்திற்குப் பொருத்தமானது.
   1. இறையருளின் மறைவல்லுநர் 2. விசுவாசத்தின் பாதுகாவலர்
   3. திருச்சபையின் ஊன்றுகோல் 4. பேதகர்களின் சம்மட்டி
   5. வேதவிற்பன்னர்

40. மனித அறிவுத்திறமையால் மெய்யியல் இறையியல் உண்மைகளைக் கண்டு பிடித்து அவற்றைப் பாதுகாத்து விளக்கும் படிமுறை
   1. உத்தேசக் கோட்பாடாகும் 2. உருவக விளக்கமுறையாகும்
   3. இறையியலாக்கமாகும் 4. ஸ்கொலாஸ்டிசமாகும்
   5. ஒமேகா தத்துவமாகும்

41. நல்லூர் சுவாமி என் அழைக்கப்படும் இலக்கிய கர்த்தா
   1. கென்றி கென்றிக்கஸ் 2. பர்சிவல் ஐயர் 3. பெசெல் நவரத்தினம்
   4. அருட்பணி ஞானப்பிரகாசர் அடிகள் 5. அருட்பணி தனிநாயகம் அடிகள்

42. மரபுரீதியான கத்தோலிக்க நாட்டுக்கூத்து ஆரம்பமாகி வளர்ச்சியடைந்த இடங்களாவன
   1. மன்னார், திருகோணமலை 2. யாழ்ப்பாணம், திருகோணமலை
   3. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு 4. மன்னார், யாழ்ப்பாணம்
   5. அம்பாறை, மன்னார்

43. கண்ரபெறி அன்செலம், தோமஸ் அக்குவைனஸ், பொனவெஞ்சர் ஆகியோர்
   1. ஆரம்பகால எழுத்தாளர்கள்
   2. மறுமலர்ச்சிக்காலத் தந்தையர்கள்
   3. ஆரம்பகால இறையியல் சிந்தனையாளர்கள்
   4. மத்தியகால இறையியல் சிந்தனையாளர்கள்
   5. கிறிஸ்தவத்தின் முக்கிய தூண்கள்

44. இசைக்கருவிகள் குரலொலிகள் ஒன்றிணைக்கப்பட்டு அமைக்கப்பட்டதும், ஜோர்ச் பிரடெரிக் வெண்டல் என்பவர் முக்கியப்படுவதுமான இசை
   1. பொலிபோனி இசை
   2. சேர்ந்திசை
   3. ஒரதோரியோ இசை
   4. பார்னிஇசை
   5. கைத்தாள இசை

45. கிறிஸ்தவர்களின் முதற் சித்திரம் என அறிமுகப்படுத்தப்படுவது.
   1. தனிநபர் வீடுகளில் வரையப்பட்ட ஓவியங்கள்
   2. கற்றகூமில் வரையப்பட்ட ஓவியங்கள்
   3. மறுமலர்ச்சிக்கால சித்திரங்கள்
   4. திருவிவிலிய சித்திரங்கள்
   5. ஐகோன் சித்திரங்கள்

46. A: அழகாகவும் ஒளியூட்டுவதாகவும் இருக்கும்
B: முகம் பயம் நிறைந்ததாக இருக்கும்
C: ஆன்மீகத்தன்மையுடன் கம்பீரமானது
D: கண்ணாடித் துண்டுகளால் செய்யப்பட்டது.
மேலேயுள்ள கூற்றுக்களில் மொசேயிக் ஓவியக்கலையினதும், ஐகோன் உருவங்களினதும் பண்புகள் முறையே
1. AD- BC 2. AB- CD 3. A- BC 4. B- ACD 5. D- ABC

47. ஒல்லாந்தர் காலக்கல்வி அமைப்பில் ஒன்றுக்கொன்று ஒவ்வாத முறையில் செயற்பட்டதன் காரணமாக தோல்வியில் முடிவுற்ற பாடசாலை அமைப்பு
   1. கோவிற்பற்றுப் பாடசாலை
   2. செமனரிப்பாடசாலை
   3. ஒல்லாந்தப் பாடசாலை
   4. அநாதை இல்லப்பாடசாலை
   5. உயர் கல்லூரிகள்

48. கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தில் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்காக இறை வேண்டல் செய்ய தூண்டிய பவுல் வாட்சன்
   1. அங்கிலிக்கன் சபைப்பணியாளர்
   2. மெதடிஸ்த சபைப்பணியாளர்
   3. அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்தவர்
   4. கல்வினிஸ்ற் சபைப் பணியாளர்
   5. லூதரன் சபைப் பணியாளர்

49. கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான பயணத்தில் எழும் சவால்களுள் பின்வருவனற்றுள் பொருந்துவது
A -திருவிவிலிய பொதுமொழிபெயர்ப்பு
B -அருளடையாளங்கள்
C -பெண்களின் பணிக்குருத்துவம்
D -தலைமைத்துவம் எந்த சபைக்குரியது
E -கிறிஸ்தவ பண்டிகைகள்

1. A BC 2. B D E 3.B C D 4.A D E 5. A C D

50. கிறிஸ்தவ மதத்தைப் பிரச்சாரம் செய்வதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு இலங்கையில் வெளிவந்த முதலாவது கிறிஸ்தவப் பத்திரிகை
   1. சத்திய வேத பாதுகாவலன்
   2. உதயதாரகை
   3. பாதுகாவலன்
   3. மன்னா
   5. ஞானார்த்த பிரதீபய

FWC

# தவணைப் பரீட்சை, யூன்- 2017
# Term Examination, June - 2017

| தரம் :- 13 (2017) | கிறிஸ்தவ நாகரிகம் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ பகுதி – I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி – II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

1. i. தூய ஆவியின் வருகையைத் தொடர்ந்து திருத்தூதர்களில் ஏற்பட்ட மாற்றங்கள் நான்கு தருக.
ii. தூய பவுலின் இரண்டாம் பயணத்தில் இடம் பெற்ற இடங்கள் நான்கைப் பெயரிடுக.
iii. பேதகங்களினால் ஏற்பட்ட நன்மைகள் இரண்டையும், சிலுவைப் போரினால் ஏற்பட்ட நன்மைகள் இரண்டையும் வெவ்வேறாகத் தருக.
iv. தூய பவுல் தலைமைத்துவம் தொடர்பாக அறிவுரை வழங்கிய திருமடல்கள் இரண்டைக் குறிப்பிட்டு, கொரிந்தியர் திருமடலில் குறிப்பிட்ட இரு முக்கிய கருத்துக்களையும் குறிப்பிடுக.
v. இந்திய இலத்தீன் திருச்சபையின் வழிபாட்டு முறையில் காணப்பட்ட விசேட அம்சங்கள் நான்கு தருக.

2. i. கத்தோலிக்க திருச்சபையில் இலத்தீன் மொழியின் சிறப்பம்சங்கள் நான்கு தருக.
ii. கிரேக்க மெய்யியல் சிந்தனைகள் இரண்டையும், இச்சிந்தனைகள் தாக்கத்தை செலுத்திய இரண்டு எழுத்தாளர்களையும் குறிப்பிடுக.
iii. இந்தியாவில் காணப்படும் கீழைத்தேய திருச்சபைகள் நான்கின் பெயர்களைக் குறிப்பிடுக.
iv. எகிப்திய நாகரிகத்தின் சிறப்பியல்புகள் நான்கு தருக.
v. கிறிஸ்துவின் காலத்திற்கு முன்னர் பலஸ்தீனாவை அதிகாரத்திற்குள் வைத்திருந்த பேரசுகள் நான்கைப் பெயரிடுக.

3. i. மத்திய காலத்தில் சித்திரக்கலை வளர்ச்சிக்கு உதவிய நால்வரைப் பெயரிடுக.
ii. 19 ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட சஞ்சிகைகள் நான்கைப் பெயரிடுக
iii. அருட்பணி நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய தமிழ் நூல்கள் நான்கு தருக.
iv. கிறிஸ்தவ ஒன்றிப்புத் தொடர்பாக பங்களிப்புச் செய்த அமைப்புக்கள் நான்கைப் பெயரிடுக.
v. குருக்களை மையப்படுத்திய பிரமிட் அமைப்பு படிநிலைகள் நான்கைக் குறிப்பிடுக.

## பகுதி II

4. i. .தூய பவுல் தமது இரண்டாம் மறைத்தூதுப் பணியின் போது எதிர் கொண்ட சவால்களை விளக்குக.
ii. .தூய பவுல் விவரிப்பதன் படி கிறிஸ்துவின் தலைமைத்துவப் பண்புகளை விளக்குக.
iii. பவுலின் திருமடல்களில் காணப்படும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய விடயங்களை விளக்குக.
iv. அலெக்ஸ்சாந்திரிய இறையியற் கல்லூரியின் சிறப்பம்சங்களை விளக்குக.

5. i. போர்த்துக்கேய ஆட்சியினால் இலங்கைக்கு கிடைத்த சாதகமான பெறுபேறுகளைக் குறிப்பிடுக.

ii. இந்தியாவில் அங்கத்துவம் வகிக்கும் தனிப்பட்ட திருச்சபைகளின் அமைப்புகளைத் தந்து, அவற்றுள் ஒன்று பற்றி சுருக்கமாக விளக்குக.

iii. புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் விளைவாக கத்தோலிக்க திருச்சபையில் ஏற்பட்ட புதுப்பித்தல்களை விபரிக்குக.

iv. திருச்சபையின் மறுமலர்ச்சிக்காலத்தில் உருவான துறவற சபைகளைப் பெயரிட்டு அவற்றுள் ஒன்றின் சீர்திருத்த செயற்பாடுகளை விபரிக்குக.

6. i. உரோமைய நாகரிகம் கிறிஸ்தவத்தில் ஏற்படுத்திய தாக்கங்களை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை சுருக்கமாக விபரிக்குக.

ii. கிறிஸ்துவின் கால யூதசமுதாய முறைகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றை சுருக்கமாக விபரிக்குக.

iii. யூதசமுதாயத்தின் மதமரபு முறைகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றை சுருக்கமாக விபரிக்குக.

iv. கிறிஸ்துவின் காலத்தில் தாழ்த்தப்பட்டோராகக் கருதப்பட்ட குழுவினரைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒரு குழுவினரை சுருக்கமாக விபரிக்குக.

7. இலங்கையின் கல்வி முன்னேற்றத்திற்கு ஐரோப்பிய மிசனரிமார் அடித்தளமிட்டனர்

i. போர்த்துக்கேயர் காலத்தில் பிரான்சிஸ்கன் சபையினரால் இலங்கை மக்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை விளக்குக.

ii. இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு இயேசு சபையினர் ஆற்றிய பங்களிப்பை விபரிக்குக.

iii. ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் காணப்பட்ட பாடசாலை முறைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றின் பணிகளை சுருக்கமாக விளக்குக.

iv. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குக.

8. திருச்சபையின் புதிய உதயத்திற்கு இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் பங்களிப்புச் செய்துள்ளது.

i. புதிய நாகரிகத்தை உருவாக்குவதில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பங்களிப்பு பற்றி விளக்குக.

ii. சமூக மேம்பாடு தொடர்பாக இரண்டாம் வத்திக்கான் சங்கம் முன்வைத்துள்ள முக்கிய கருத்துக்களை விளக்குக.

iii. கிறிஸ்தவ ஒன்றிப்பை ஏற்படுத்துவதற்கு சாதகமாகவும், பாதகமாகவும் விளங்கிய காரணிகளை விளக்குக.

iv. ஆசியாவில் கிறிஸ்தவ மதம் அர்த்தமுள்ள மதமாக விளங்க திருச்சபை எவ்வாறான துறைகளில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்பதை விபரிக்குக.